



ஓலை 198| ஓசை 321| நவம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் ந. பிச்சமூர்த்தி

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

பொருள்

மழை பெய்வதால்தான் உலகம் வாழ்ந்து வருகிறது.
எனவே மழையானது உலக உயிர்களுக்கு அமிழ்தம்
போன்றதாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

இது காதல் கவிதை அல்ல

வாசித்து விட்டு உறுதியாய் சொல்லுங்கள்
வாசித்த இக்கவிதை காதல் கவிதையல்ல
வாசியுங்கள் எவ்வரியில் காதலை சொல்கிறது
வாசியுங்கள் இங்கயே தான்

அன்றொரு நாளில் அவளிருந்தாள் கண்ணிற்கு
தோன்றாத கைவீணை கொண்ட சரசுவதி
குன்றா குளிர்விளை கொண்ட நிலவவள்
அன்று அருகில் அவள்.

உங்கள் கவிதைகள் தந்தாலோ வாசித்து
உங்களுக்கு நல்ல கவிதை எழுதிட
அங்கேயே சொல்லியே தந்திடுவாள் சந்திரனின்
தங்கையவள் நங்கை அவள்.

வண்டுகளே நன்றாக கண்திறந்து அல்லியவள்
கண்டீரோ அல்லியென்று காணாது விட்டீரோ.
தண்ணீரே தண்ணீரே என்நிலவை கண்டாயோ
தண்நிலவை கண்டாயோ நீ

வான்நிலவின் அந்த நிழலென்று விட்டீரோ
என்னவென்று சொல்வது எங்கேநான் தேடுவது
என்னவளை காதல் கவிதை எழுதாதே
என்றுதான் சொல்வாள் அலர்ந்து

அறத்தினை நல்ல கருத்தை எழுதி
திறத்தினை காட்டிட சொல்லிடுவாள் வாசகரே
கூறாதீர் காதல் கவிதை இதுவென்று
கூறாதீர் வாசித்து நீர்.

சொன்னாலோ காதல் கவிதையல்ல என்றுநீர்
சொன்னால் உடனடியாய் வந்திடுவாள் எங்கயோ
சென்றவள் வந்திடுவாள் வாசித்து சொல்லுங்கள்
என்னால் இயன்றது இஃது.



குறிப்பு : இக்கவிதை இதழகலி வகையினை சேர்ந்தது. இக்கவிதையை வாசிக்கும் போது உங்கள் இரண்டு உதடுகளும் ஒட்டாது.இது இலக்கண வெண்பா ஆகும்

பாவகை : எட்டடி பஃறொடை வெண்பா

மனதிலே என்றுமே
மாசின்றி வாழ்தல்
சினத்தை விடுத்திடல்
சீரைப் பெருக்கல்
தனக்கென வாழா
தகைமை நிறைத்தல்
அனந்தல் விடுத்தே
அருளுடன் ஈதல்
இனத்தை அணைத்திடல்
இன்சொல் கழறல்
கனப்பின்றி நாளும்
கடமையை ஆற்றல்
நனவில் நலிவகற்ற
நல்லதைச் செய்தல்
மனவலி கொள்ளல் மதிப்பு.



அனந்தல்-செருக்கு

கவிஞர் செ. கலைவாணி

அன்பே வெல்லும் கருவி

பாவகை : நிலைமண்டில ஆசிரியப்பா

அஞ்சா மறவர் அத்தனைப் படைகள்
வஞ்சக் கருவி வன்களம் இருந்தும்
வன்பகை எதிர்த்து வன்போர் வெல்ல
அன்பெனும் கருவியை அணைப்போம் வாழ்விலே!

போர்க்களம் நுழைந்தே போரிடும் வீரரும்
போர்ப்படைக் கருவியைப் புனிதமாய் ஏந்தியே
படைகளை வெல்லும் பாங்குடன் சென்றே
மடைதிற வெள்ளமாய் மறவரும் செல்வரே!



வெல்வதும் தோற்பதும் வீரனின் நிலையே
கல்லா மாந்தரின் கற்பிலா செயலால்
வல்லோர் ஒருவரின் வலிமையால் புவியில்
நல்லோர் அனைவரும் நலிந்தே இருப்பரே!

நன்றதை உணர்ந்து நலிவிலா பாதையில்
என்றுமே மாந்தர் இனிதாய் வாழ்ந்துமே
அன்புளம் கொண்டே ஆருயிர் அனைத்தையும்
கன்றென நினைந்தே கனிவுடன் திகழ்வமே!

அன்பெனும் கருவியை அனைவரும் ஏந்துவோம்
வன்முறை தவிர்த்தே வளமுடன் வாழ்வோம்
பண்பினைப் புகட்டியே பண்புடன் பழகியே
மண்ணினில் நல்லதோர் மாந்தராய் வாழ்வமே!

அன்பினை வாழ்வினில் ஆழமாய்ப் பற்றுவோம்
புன்னகைப் புரிந்தே புவியினில் வாழ்வோம்
இன்னலைக் கன்னலாய் இனிதாய் ஏற்போம்
என்றுமே அன்பினை இறையெனக் கொள்வமே!

கவிஞர் முனைவர் மு. செல்வி, தூத்துக்குடி

பாவகை : நிலைமண்டில ஆசிரியப்பா

க. பொய்மை பெருக்கும் படிமை பதிப்புகள்
மெய்மை துறந்த புலம்.

உ. ஒப்புரவு இன்றி ஒழுகும் உறவினர்
துப்பார் துறந்த குடில்.

ங. நெஞ்சம் வருத்தும் தெரிவுப் பிறழ்வுகள்
துஞ்சல் மறுக்கும் நிலம்.

ச. ஆக்கம் விளைக்கும் அறிவைப் பெருக்குக
ஊக்கம் உறையும் நிலம்.

ஞ. அகலாப் பகைமை விதைத்த மருட்பிழை
திக்கற்று மடியும் குடி.



வண்ணத்துப்பூச்சி பூவின் இதழ்களுக்குள்
வானத்தை அடையாளமிடும்.
வானவில்லோ, வண்ணங்களின் கலவையில்
வனத்தை அளந்து காட்டும்.
கிளையில் ஊசலாடும் காற்று மூச்சென
நுழையும் பொழுதில் வானத்தை வடிக்கும்.
முதுகெல்லாம் சுமையென பள்ளிவிரையும்
மழலையோ இறுதி மணியோசை எதிரொலிக்கையில்
வானத்தை அடக்கிக் காட்டும்.
அருள்தரும் ஆண்டவனின் ஆலயத்தில் நுழையாமல்
உள் ஒடுங்கிய குரலுக்குள் எல்லோரையும்
சாமியாக்கும் யாசகன் சில்லறைகளில்
வானத்தை வரைவான்.
கவலையற்றவனின் நகர்ந்து போக முடியாத
பகலுக்குள் ஒளிந்து கொண்டு
வானத்தைக் கேட்கையில் இருளின்
உச்ச நடனத்தை விரித்துக் காட்டுவான்
மதுவின் பிடிக்குள் எதிர்காலத்தை மறந்து
விழுந்து கிடப்பவனோ தொண்டைக் குழியில்
இறங்கும் திரவத்தில் மின்னும் நட்சத்திரங்களை
எண்ணிக் காட்டுவான்.
நிலையாமை நிலை கொண்ட நகர்தலின் உலகத்தில்
பெருகும் ஆசைகளின் கரங்களில்
வழியும் குருதியில் நிலை கொண்ட
அவரவர் கனவுகளை அடைகாத்திடல்
விரியும் வானத்தின் வேலையல்ல.



கவிஞர் இளையவன் சிவா

நேற்றிலிருந்து
என் கடைசி பக்கத்தை
காணவில்லை.

வெள்ளைத்தாளில்
கறுப்பு மையினால்
அச்சிடப் பட்டிருந்தது.

மேற்பகுதி
வலது பக்கத்தின் மூலை
சற்று மடிந்திருக்கும்.

கீழ்ப்பகுதியில்
நடுவில் பக்கத்தின் எண்
இருக்கும்.

கடைசி பக்கமின்றி
முடிவு தெரியாமல்
அழுது கொண்டிருக்கிறது
எனது வாழ்க்கை.

அதைக்
கண்டுபிடித்துக் கொடுப்பவர்க்கு
தக்க சன்மானமாய்
என்னையே நான்
தரவிருக்கிறேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

பகலில் உதித்து
இரவில் தேயும்
நாட்களாய் நான்

கண்ணீர் துளிகளின்
அஞ்சலி கூட்டத்தில்
முதல்வனாய் நான்

சோகத்தின் சுவர்களில்
வரையப்படும் வாழ்க்கை
பாடங்களாய் நான்

உறவுகளின் தேரோட்டத்தில்
தினந்தோறும் மிதிபடும்
நிழலாய் நான்

யாருக்கும் வேண்டாத
முகத்தின் தொலைந்த
முகவரியாய் நான்

வாழ்க்கை ஓட்டத்தில்
கடைசியில் நிற்கும்
ஊனமாய் நான்

நான் என்னும்
சொல்லின் அழிக்கப்பட்ட
அகராதியாய் நான்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

மூன்று தசாப்தங்களுக்கு முன்
வாழ்க்கை இவ்வளவு வேகமாக இல்லை
கடிகாரம் இருந்தது;
ஆனால் நேரம் ஓடவில்லை
கையில் கைப்பேசி இல்லை;
ஆனால் கைகளில் உறவுகள் இருந்தன
வாசலில் அழைப்பு மணி இல்லை;
ஆனால் வாசலைத் தட்டும் நட்புகள் இருந்தன

கடிதங்கள் வந்தன; அவற்றைத் திறக்க
இதயங்கள் காத்திருந்தன
ஒரு தொலைபேசி அழைப்புக்காக
ஒரு குடும்பமே சுற்றி அமர்ந்த காலம்
தொலைக்காட்சியில்
சில நிகழ்ச்சிகளே இருந்தன;
ஆனால் வீட்டில் நிறைய உரையாடல்கள் இருந்தன

மாலை நேரம் வந்தால் மைதானம் அழைத்தது;
மண்ணில் விழுந்தாலும் மனங்கள் சிரித்தன
அண்டை வீட்டார் அந்நியர்கள் அல்ல;
அவர்களின் வீட்டுச் சோறும்
நம் வீட்டுச் சோறானது

பணம் குறைவாக இருந்தது;
ஆனால் பகிர்வு நிறைவாக இருந்தது
வீடுகள் சிறியதாக இருந்தன;
ஆனால் இதயங்கள் பெரிதாக இருந்தன
இன்று வீடுகள் உயர்ந்துவிட்டன;
ஆனால் சில உறவுகள் தூரமாகிவிட்டன

தொழில்நுட்பம் உலகத்தை அருகில் கொண்டுவந்தது;
ஆனால் அருகில் இருந்த சிலரை
தொலைவில் நிறுத்திவிட்டது
மூன்று தசாப்தங்களுக்கு முன்
நாம் வசதிகளில் ஏழைகளாக இருந்தோம்;
ஆனால் மனிதநேயத்தில்
செல்வந்தர்களாக இருந்தோம்.



இப்போது வசதிகள் அதிகம்; நேரம் குறைவு;
தொடர்புகள் அதிகம்; உரையாடல்கள் குறைவு
அந்தக் காலம் திரும்பி வராது.
ஆனால் அந்தக் காலத்தின்
அன்பையும், அரவணைப்பையும்,
அண்டை உறவையும், பகிர்வையும்
நம் இன்றைய வாழ்வில்
மீண்டும் விதைக்கலாம்!

மூன்று தசாப்தங்களுக்கு முன்
வாழ்ந்த வாழ்க்கை
பழையதாக இருக்கலாம்;
ஆனால் அதில் இருந்த மனிதநேயம் மட்டும்
என்றும் புதுமையானது!

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல

பூங்குயிலே பூங்குயிலே கேளு

பூங்குயிலே பூங்குயிலே கேளு நீயும்
பாட்டெடுத்த காரணத்த கூறு என்னாண்ணு.



காட்டடுக்குள்ள இடித்த இடியில
மேகமெல்லாம் கூடிநின்னே கொட்டுதடி
ஊத்தாட்டம் பூமியிலேதாண்ணு.

நெஞ்சாங்கூட்டில
மயிலிறவு தடவுனாப்புல தாங்குதடி
சுத்தற கனவுல சுகமா சொல்லணுமுல்ல.

வட்டமா வெச்ச பொட்டுந்தான
வான்நிலாவா ஆனதுண்ணோ
பூகம்பம் தான பொலிவா பொறப்பட்டதோ?

வந்த மழையில வாசமுந்தான்
வாடாமல்லியாட்டம் வந்தாடுதோ?
நெலமதான இங்குமங்கும்
ஊசலாடி தள்ளாடுதோ?

ஊதக் காத்தும்
உச்சமில்லாமல உரசுதடி
உம்மனசும் எம்மனசுமா.

ஆசபாசமெல்லாம்
உருகுதய்யோ உம் பாட்டினிலே.
நெஞ்சமுமே வேகுமோ கட்டையிலே போறயில.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

காற்றின் மொழி
அறிந்துவிடலாம்...
ஆனால்,
நான் உன் மேல் கொண்ட
அன்பின் ஆழத்தை அளக்க
எத்தனை யுகம் கடந்தாலும்
இந்த உலகில்
எந்தவொரு கருவியுமே
கண்டறிய இயலாது..



கவிஞர் நிஸ்ரினா மதீனா

ஆசைகளைத் துறந்த
அடுக்களைத் துறவி.
எனக்காக வாழவே எடுத்தார் பிறவி.

ஒற்றை வார்த்தையில்
உரைக்க இயலுமா?
உற்ற துணையாய் வாழும்
உறவதை?

சத்தானதை நான்சாப்பிட
பித்தாகவே அலைவாள்.
எத்தனைமுறை சண்டையிட்டாலும்
தேடிவந்து பேசுவாள்.

நான் வெற்றிபெற்றால் மகுடம் சூடுவாள்
தோல்வியுற்றால்
எனக்குத் தோள் கொடுப்பாள்.
அதனாலென்னவோ
வெற்றிக்கும் தோல்விக்கும்
வித்தியாசமில்லையெனக்கு.



தேடிவந்து வரம்தரும்
தெய்வம் அம்மா.
நாடிவரும் மற்ற
உறவுகளெல்லாம் சும்மா.

எதிர்பார்ப்பு இல்லாத எழிலான அன்பு.
இவளின் முன்னே
நெருங்காது துன்பு.

திருட்டுப்போன நேரங்கள்
எனது நேரங்கள் காணாமல் போயுள்ளன

யார் யாருக்காகவோவெல்லாம்
விரும்பித் திருட்டுக் கொடுக்கும்
எனது நேரங்கள்
எனக்குப் பயன்படவில்லை

நேரக் குவியலோடு
தூக்கமும்தானே
தொலைந்து போகிறது

காலாற நடக்க
கண்டபடி கதைத்திருக்க
என்னை அழகுபடுத்த
எதற்குமே எனக்கில்லை நேரம்
இறைவனைப் பணிந்திருத்தல் தவிர



யாரோவெல்லாம் மகிழ்ந்திருக்க
யாரோவெல்லாம் எழுந்திருக்க
யாரோவெல்லாம் உயர
யாரோவெல்லாம் மேன்மை பெற
எனது நேரங்கள் கடத்தப்படுகின்றன

அந்த யாரோவெல்லாம்
எனக்கான பந்தங்களாய்
எனது சொந்தங்களாய்
வரித்துக் கொண்டதாலோ
வலிக்கவில்லை இதயம்

எனினும் எனது நேரங்கள்
எனக்கானதில்லை
நானும் எனக்கானவளில்லை
யார் யாருக்கோவெல்லாம்
வழித்துணையாய் பயணிக்கிறேன்
என் பயணங்களில் யார் கூட வருவரோ?

கவிஞர் நஸ்ரினா, குருணாகல் (இலங்கை)

விடியலில் தொடங்கி விடாத ஓட்டம்
இரவு வரை தொடரும் உழைப்பு
அனைவர் புன்னகைக்கு வழி தேடி
ஆசைகளை நிராகரித்தத் தலைவித் தியாகம்
அன்பு மட்டும் போதுமெனும் மனம்
அலட்சியம் காயம் பரிசாகும் போது
சிந்தும் கண்ணீர் மௌனக் குருதி
தன்மானமும் தவிப்பும் போராடும் களம்
மீண்டும் புன்னகை அவளது மௌனத்தில்
எரிமலையாய் உறங்குகின்றது ஒரு பேரமைதி
யாரிடமும் உரக்கச் சொல்ல முடியாத
குடும்பப் பெண்ணின் அகிம்சைப் போராட்டம்
இதயத்தில் வடுவும் கண்களில் கண்ணீரும்



கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருது நகர்

கயல்விழிப் பார்வையிலே
கனிவானது மனது
காரிகையின் அன்பிலே
கார்மேகமும் இசைபாடுது

கன்னக்குழி அழகினிலே
கார்குழல் தொட்டாடுது
செவிகளின் லோலாக்கு அசைந்தே
சிந்துக்கவிப் பாடுது

எடுப்பான நாசியால்
எண்ணங்கள் சுழல்கிறது
இதழ்களில் தேனமுது
இளமையும் இனிதானது

விம்மிய அழகும்
வியப்பூட்டிச் செல்கிறது
சிற்றிடை அசைவினில்
சிதறுகிறது உள்ளம்

தள்ளாடும் நடையில்
தண்ணிலவின் குளிர்ச்சியே
கால்கொலுசின் ஓசைதனில்
காதலின் சங்கீதமே

பட்டுப்பாதமது நடந்திட
பசுமை எங்கும் பூத்ததே
உள்ளங்கவர் கள்ளியென
உதடுகள் முணுமுணுக்கிறதே



இனியவளே இளையவளே
இதயம் கவர்ந்தவளே
உரியவளே உரிமையானவளே
உணர்வினில் கலந்தவளே

இளமையின் எழிலே
இளவரசியின் பொழிவானவளே
ஈர்த்திட்டாய் பாவையே
ஈந்திட்டேன் என்னையே

இருகரங்கள் பற்றிடு
இல்லறம் நல்லறமாகிடவே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

துயரம் போர்த்திய வாழ்க்கையை
அப்படியே சிதைத்து விடாதே!
கனவுகளுக்காய் உயிர் கொடுத்த
காலங்களை மறவாதே!
உனைப் பிரிந்த கைகளுக்காய்
மீண்டும் மீண்டுமாய் காத்திராதே!
தடை தாண்ட வேண்டிய இலக்குப் பரீட்சையில்
தோல்வியை கணிக்காதே!
வர்ணமிட்டு வரைந்த வாழ்க்கைப் பாதையை
அழுக்காக்கி விடாதே!
கடலுக்குள் சிக்குண்ட விழிகளை
மூழ்க விடாதே!
புரிந்துணர்வில்லா நேயத்தை பற்றிவிடாதே!
மீண்டெழு சகி.
உன் இலக்கை
அடையும் தூரத்தை கணக்கிடாதே!
உன் பலவீனத்தை எதிர்த்து
நம்பிக்கையை விதைத்திடு!
உனக்கான பாதை
இன்னும் விரிந்தே இருக்கிறது!



கவிஞர் றாபி ஷேபா கானம், பாலமுனை (இலங்கை)

விழுந்தாலும் எழுந்திடுவேன்
வலிகள் வந்தாலும் சிரித்திடுவேன்.
உலகமே எதிர்த்து நின்றாலும்,
என் பாதையில் நான் நடந்திடுவேன்!

கனவுகள் காண்பது மட்டும் போதாது,
அதை நனவாக்க உழைப்பும் வேண்டும்.
தடைகள் ஆயிரம் வந்தாலும்,
தளராத மனமும் வேண்டும்!



இன்று என் முயற்சியைப் பார்த்து
சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்.
நாளை என் வெற்றியைப் பார்த்து
வியக்கும் அளவுக்கு உயர்வேன்!

என் லட்சியம் என் பாதை,
என் நம்பிக்கை என் துணை.
எத்தனை தடைகள் வந்தாலும்,
என் வெற்றி என் கையில்!

சிரிக்கத் தெரியாதவர்கள் துவக்கினார்கள்.
நகைச்சுவை மன்றம்.
சிந்திக்கத் தெரியாதவர்கள் துவக்கினார்கள்
சிந்தனை மன்றம்.
இலக்கே அறியமனமில்லாதவர்கள் துவக்கினார்கள்.
இலக்கிய மன்றம்.

உழைப்பவர்களை புறக்கணித்தவர்கள் துவக்கினார்கள்
உழைப்பாளர் மன்றம்.
கசாப்புக்கடைக்காரர்கள் துவக்கினார்கள்.
ஜீவகாருண்ய மன்றம்.
அடுத்தவர்கள் உணவை பிடுங்கி
தங்கள் ஆயுளை நீட்டித்துக்கொண்டவர்கள் துவக்கினார்கள்.
அன்னதான மன்றம்.
சாதியை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள் துவக்கினார்கள்.
ஒற்றுமை மன்றம்.

தேவைகளுக்காக பேசுபவர்கள்
தேவைகள் முடிந்ததும்
வீசுபவர்கள் துவக்கினார்கள்
நட்பு மன்றம்.
தாயை கௌரவப்படுத்த எப்போது
தாய்மை மன்றம் திறக்கப்போகிறீர்கள்.?
அகரத்தில் இருந்து சிகரத்தில் ஏற்றிய ஏணியான
ஆசிரியர்களுக்கு எப்போது திறக்கப்போகிறீர்கள்.
அறிவு மன்றம்.
வாய்மையை உலகிற்கு அறிமுகம் செய்த
அரிசந்திரனுக்கு எப்போது திறக்கப்போகிறீர்கள்?
வாய்மை மன்றம்?



கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

யுகாந்திரங்களை உருக்கி
தாகம் தீர்த்துக்கொள்கிறது
நம் காதல்.

பருகிய பின்னும்
தீர்வதாயில்லை
தாகம்.

அது தாகமன்று;
உன்னை இன்னும் இன்னும்
நேசிக்கத் துடிக்கும்
எனதான்மாவின் தீராத்தேடல்!



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

முகநூலிலொரு முகமறியா ஒருவர் தண்ணீரின்
அகவைக்குமொரு முடிவுநாளுண்டோ எனப்பதிந்தவொரு பதிவை
அடியவன் நானும் கண்டுகொள்ளாது கடந்துவிட்டேன்;
அன்பெந்தன்மேல் கொண்ட பொருளாதார ஆசிரியை
அப்பதிவை அடியேனுக்குப் பிற்பகல்வேளை உணவுண்டடியேன்
அயரும் நேரமதில் அனுப்பியதறிந்து யானும்படித்திட
அன்றுபிற்பகல் அடியேனுண்டது தயிர்சாதம் என்பதாலென்னவோ
அதுவெனக்கு அதன்பிள்ளையாம் மோரை நினைவூட்டியதே!

வரக்கவியாய் அடியேன் இல்லாது போனதால்
வாரக்கவிதை எழுதக்கருப்பொருள் எதுவெனச் சிந்திக்க,
வரதனென்ற இயற்பெயர் கொண்ட காளமேகத்தின்
வளமார் கவிதை வந்ததே நினைவில்

இன்றெங்கும் காண்கின்ற பொருளெல்லாம் கலப்படமாய்
இருக்க காண்கின்றோமதில் நல்லகலப்படம் தீக்கலப்படமென
இரண்டுமுண் டென்பென் அடியேன் அறிகவேயதனை

மோரீல் நீர்கலந்தால் நல்ல கலப்படம்;
நீரில் மோர்கலந்தால் அதுதீக் கலப்படமே
மோர்விற்ற ஆயர்குல மங்கையிடம் மோரருந்த
விரும்பியதை காளமேகம் வாங்கிடவது நீராயிருக்க
ஆத்திரம் கொள்ளாது ஆயர்மகள் செய்த
அபத்தமான கலப்படத்தை அருந்தமிழ்க் கவிதையிலே
அழகாக எடுத்துக்கூறி அன்னவளையும் திருத்தினாரே!



கார்என்று பேர்பண்டத் தாய்வளைத்து உண்பீரோ
நீர் என்று பேர்பண்ட தாய்வெளுத்து விற்பீரோ
வார்ஒன்றும் பொன்முலைமேல் ஆய்ச்சியரே வந்தீரோ
சோணாடு உமக்கடுத்த தாய முகிலும் பெற்றீரே
..... கவி காளமேகம்

இரட்டுறமொழிதலில் இமயம்போல் நின்றுயர் கவிஞனவன்,
இயம்பிய இனியத்தமிழ்ப் பாடல்களில் இதுவும் ஒன்று;
வானத்தில் மேகமென பெயர்பெற்று மண்ணில்
வாட்டம் போக்கும் நீரென பெயர்பெற்று
வீதியிலே விற்குமிந்த ஆய்ச்சியரால் மோரென
கூறப்பெற்றதால் முப்பேரும் நீரடைந்ததாய்க் கூறிமோரில்
கலந்ததில் நீரதிகமானால் மோர்மோராய் இருக்காதெனக்
கவினுறப் பாடினாரதை எண்ணி மகிழ்வோமே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

சாலை ஓரத்தில் கிடந்த
அந்த உருவத்தைக் காண்கிறேன்;
சரிந்து கிடக்கிறது தலை!



ஒட்டியிருக்கும் வயிறு;
என்ன நிறத்திலது
இருந்ததென்றே யாருக்கும்
தெரிவிக்காத வேட்டி.

இருளடைந்த தோப்பாய்
இறுகிக்கிடந்த தலைமுடி;

ஆகாயத்தை அளப்பது போல
மல்லாந்து பார்க்கும் உடல்.

நடைபாதை ஓரம் மட்டும்
தனக்குச் சொந்தமென்று
ஒண்டிக் கிடந்த உருவம்.

வாழ்வின் பாதி நாளைக்
கழித்துவிட்டுத் தற்பொழுது
வழி தெரியாமல் கிடக்கிறதோ?

யாரையேனும் வரச்சொன்ன பின்
வழி பார்த்துக் கிடக்கிறதோ?

வரச்சொன்னவன் மிக விரைவாய்
வந்து சேரட்டுமே!
எவ்வளவு நேரம்
அங்கேயே ஏமாந்திருப்பது?

இல்லை, இல்லை
ஏமாந்து கிடப்பது?

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

பெரும் கனவோடு எழுந்தது
என்காதல்!

அடுக்குகளில் அகப்பட்ட
மகரந்தத்தை நோக்கி நகர்கிறது
என் மனவெளி!

என் வாழ்வின் வரம்புகள்
உன் நிகழ்வெல்லை நெருங்குமுன்னே
தீர்ந்து போனது!

பெரும் பருதியின் குணத்தோடு
பிறந்த நாட்கள் மட்டும்தான்
என் ஞாபகத்தில் இருக்கிறது!

அகண்ட பால் வழி மண்டலத்தில்
கணக்கற்ற கண் சிமிட்டலுக்கு நடுவே
உனக்காக ஒளிர்ந்த கடும்பகல் நான்!

இருள் வானின் செறிவுகளில்
உன் இடக்கரடக்கல் எழுகிறது!

போர் முடித்த இரவுகளின்
போர்ப் பரணியோடு எழுகிறது
உன் வேல் விழி!

கதைக்கும் முன்பே
காலாவதியான மூச்சுக்காற்றிற்காக
உன் முற்றத்தை திறக்கிறாய்..!



ககனமெங்கும் நிரம்புகிறது
நீ கட்டவிழ்த்து விட்ட மாயங்கள்!

என் விருப்பம் சுமந்த மடல்
உன் நிகழ்வெல்லை நெருங்கும் போதெல்லாம்
நீயோ கருந்துளையாய் மாறி
காணமல் போகிறாய்!

வாள் முனை கண்டும் வாடதவன்
நீ நடத்தும் புதிய போர்முனையில்
பலி பீடம் நெருங்கும் முன்னே
வீண் பலி ஏகினேன்!

உன் இருளின் படையலுக்கு
நானே இறுதி விருந்தான பின்னே
இன்னும் ஏன் நடத்துகிறாய்
இந்த கருந்துளை நாடகம்?

நானில்லாத இரவுகளுக்கு மட்டும்
நீயே விளக்காய் இரு
நான் திரியாய் எரிகிறேன்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

காலங்கள் மாறலாம் கடமைகள் தீரலாம்!
ஞாலத்தில் வாழ்க்கை நமக்கென உண்டே!
எண்ணங்கள் பலவாய் எழவைக்கும் பலமாய்!
வண்ணங்கள் மாறிடும் வருந்தாதிரு திடமாய்!

என்றெல்லாம் உரைத்து எனைமாற்றும் திசையாய்
நின்றென்றன் மனத்துள் நீங்காமிளிர்க் கதிராய்
உன்னன்பு இருக்கையில் உனைநான் விடுவனோ?
கனவிலும் நீயே! நினைவிலும் நீயே!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

ஜன்னல் ஓர இருக்கை



வழக்கமான
பேருந்து பயணம்
வழக்கத்துக்கு
மாறாக கிடைத்தது
ஜன்னல் ஓர இருக்கை!

வேடிக்கை பார்க்கும்
முனைப்பில் விழிகள்
திடீரென்று
கையில் திணிக்கப்பட்ட
வெள்ளரிக்காய்
வேண்டாம் என்றாலும்
விடவில்லை!

பேருந்து வேகம் எடுக்க காத்திருந்தது
அதிர்ச்சி
வெள்ளரிக்காய்க்காக
விசி எரியப்பட்ட காசு!

காசை எடுக்க?
முனைந்து
விழுந்த முதாட்டி
நிதானித்து
பார்க்கும் முன்பாக
நிலைகுலைந்த நிலையில்!
விரைந்தது கைகள்
வெள்ளரிக்காயை நோக்கி!

அன்றிலிருந்து இன்று வரை
மகிழ்வாக அமர்ந்து
பயணிக்க விரும்பும்
ஜன்னல் ஓர
இருக்கையில்
அமர மறுக்கிறது
மனம்!

கவிஞர் அ. தௌபிக் ராஜா, மதுரை

விதைக்கின்ற விதைகள் யாவும்,
முளைத்தெழுந்து ஆர்ப்பரிப்பதில்லை.
உச்சரிக்கப்படும் வார்த்தைகள் யாவும்,
உச்சம் பெறுவதுமில்லை.



வார்த்தைகளில் வாழ்த்துக்களிருந்தால்,
அவை அடைந்தவனின் மனப்பூமி கீறி,
முளைத்துப் பெருவிருட்சமாகி,
அவனை ஆசீர்வதிக்கின்றன.

வாழ்த்துக்கள் வெறும் வார்த்தைகளல்ல.
அவற்றிற்குச் சிறகுகளிருக்கின்றன.
வாழ்த்துக்களுக்குப் பின்னால்,
உன்னால் முடியுமென்ற,
தாரகமந்திரம் மறைந்து கிடக்கிறது.

தொட்டனைத்தூறும் மணற்கேணியாய்,
எம சிந்தைக்குப் புலப்படாத சிறப்புகள்,
புதையுண்டு கிடக்கின்றன.
உறங்கிக் கிடக்கும் ஆற்றல்களை,
உசுப்பிவிடுகின்றன வாழ்த்துக்கள்.

சோர்ந்துபோன உள்ளங்களை சூடாக்கி,
சோம்பேறித்தனத்தை தூரவிரட்டுகின்றன.
வாழ்த்துக்கள் வார்த்தைகளின் ராஜ கிரீடங்கள்.
வாழ்த்துக்கள் வார்த்தைகளின் புதையல்கள்.
வாழ்த்துங்கள் !எவரும் வீழ்ந்துவிடாதிருக்க.



அன்பான இதயத்தில்
என்னாலும் பூத்திடும்
இதய மலராய்
இனிய நேசம்தான்.

ஆர்ப்பரிக்கும்
கடலிலும் அதிசயங்கள் ஏராளம்
ஆயிரம் உயிரினங்களின்
அழகான புகலிடம்.

இனிய வாழ்வின் தொடக்கம்தான்
என்னாலும் அழகாய் தொடர்ந்திடுமே.
அன்பென்ற ஒன்றுதான்
விருட்சமாய் தழைக்குமே.

இன்றைய செயல்கள் யாவும்
சிறப்புடனே அமைந்திட்டால்
நாளைய விளைச்சலாய்
நன்மை வந்து சேர்ந்திடுமே.

அலைகளில்லா கடலில்லை
கவலையில்லா மனிதன் இல்லை
அச்சத்தை புறந்தள்ளியே
அற்புதத்தை படைத்திடுவோம்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு



கடல் நீரைக் குடித்தாலும்
கானல் நீரைக் கடந்தாலும்
தணியாத தாகமது :
பணத்தின் மகுடமும்
பதவியின் சிம்மாசனமும்
பசியாற்றாத் தனிமையது!

வெளி உலக ஆரவாரங்கள்
விலகிப் போகும் நள்ளிரவில்,
நெஞ்சக் கூட்டின் ஜன்னலில்
நிசப்தமாய் முட்டும் தாகம்
விலைமதிப்பற்ற ஒற்றைப் புன்னகைக்கும் ,
நிபந்தனையற்ற ஒரு துளி அன்பிற்குமாய்
ஏங்கித் தவிக்கிறது !

ஆயிரம் உறவுகள் சூழ்ந்திருந்தும்,
அகம் உணர்ந்த ஒற்றை உயிர்
அருகிருக்கத் தேடும் தாகம்,
முகமூடிகள் கலைந்து,
தன் நிஜ வடிவை
மறுக்காமல் ஏற்கும் இதயத்தின் தாகம்!

காலத்தின் நதியில்
கரைந்து போகும் வரை,
மனிதனை மனிதனாய் வாழ வைக்கும்
மனதின் ஆழத்துத் தாகம்
என்றும் தீராத ஜீவநதி!

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

அன்று
என் வாழ்வின் பாதியானாய்
நெற்றியில் குங்குமம் சூட்டி
தலையில் மல்லிகை மலரை வைத்து
நெஞ்சோடு என்னை அணைத்தாய்.

காலனுக்கு பொறுக்கவில்லை.
பாதியில் எனை பிரிந்து சென்று
பரிதவிக்க வைத்தாய்.

நீ எனை பிரிந்து
என் வாழ்வை கண்ணீர் கடலாக்கினாய்.
உன் உருவத்தை காணாமல்
உள்ளம் துடிக்கத் தான் செய்கிறது.

உன் தேகத்தை காணாமல்
கண்கள் கலங்கி கண்ணீர் கொட்டதான் செய்கிறது.



இன்று
நம் மகளின் மகனாய்,
மறுபிறவி எடுத்து வந்தாயோ?

அதே கண்கள்
அதே புன்னகை
நீ தானென்ற நம்பிக்கையில்
மீண்டு வாழ்கிறேன்.
அன்று நான் உன் மார்பில் சாய்ந்தேன்.
இன்று நீ என் மடியில் தூங்குகிறாய்!

காலத்தின் சுழற்சியில்,
எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்போ!
அன்று என் கணவனாய் என்னைக் காத்தாய்.
இன்று நம் பேரனாய் என் ஆயுளை நீட்டிக்க வந்தாய்!

அடுத்த ஜென்மமும் உன்னோடு தான் என்று
அடிக்கடி கூறும் உன் வாக்கு பலித்ததோ மாமா
சேர்ந்து வாழ்வோம் என்ற
நம்பிக்கை பொய்த்து போனதோ என்றெண்ணினேன்.

இல்லை
இப்போதும் சேர்ந்து வாழ்கிறோம்.
அப்போது கணவனாய்.
இப்போது பேரனாய்.
என் வலிகளை மயிலிறகு கொண்டு
வருட பிறந்த பூவின் இதழ்
இவன்.

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர், சென்னை

பருவத்தில் மழை வரவே காற்றடிக்கும்
சீற்றத்தில் கடலுள்ளே தோன்றும் அழுத்தம்!
கடல்நீரை உறிஞ்சிபடி மேகமும் தாங்கிடுமே
சில்லென்று காற்றடிக்க மேகமதில் பொழிந்திடுமே!

தென்மேற்கில் காற்றடித்து மழைபொழிவை தந்துவிட்டால்
அணைகளுமே நீர்தேக்கி பாசனத்திற்கு உதவிடுமே!
நாடுள்ளே பொழிகின்ற மழைதானே செழிப்பிற்கு
வாழ்விற்கு உதவிடுமே விவசாயம் செய்திடவே!

கால்நடையும் உதவிட்டால் உழுதிடலாம் நிலங்களையே
உழுகின்ற நிலங்களுக்கு இயற்கை உரமதையே
கால்நடையின் கழிவுகளை உரமாக்க பயனாகும்
பருவத்தில் பயிரிட்டால் விளைச்சலுமே கூடிடுமே!



வங்கத்தின் கடலினிலே தோன்றுகின்ற புயற்சின்னம்
வரவழைக்கும் மழையாலே வளமோடு அழிவும்தரும்
நாட்டுள்ள மழைபொழிய நமக்கான தேவைகளை
நன்றாகப் பயன்படுத்தி பலனைத்தான் பெறலாமே!

இயற்கையின் வரமாக இருந்துவரும் மழைபொழிவால்
இருப்போரின் தாகத்தை தீர்த்திடுமே நல்வழியில்
புயல்வந்தால் பாதுகாத்து அழிவுகளைத் தடுத்திட்டால்
பஞ்சமின்றி வாழ்ந்திடலாம் பலநாளும் உணவுடனே!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

செல்வமே! தெளிவே!
செம்மொழி போலவே!
மழலை அமுதம்
மண்ணில் விதைத்தால்
மாண்புறு நாளை
பயிர் முளைக்கும்!

சிறு கரங்கள் புத்தகம்
பிடிக்கும்
நாளை அக்கரங்களே
நாட்டைப் படைக்கும்!
அறிவெனும் ஒளியை
அகத்தில் ஏற்றினால்,
அறியாமை இருள்
அகன்று விடியும்!

ஒழுக்கமே உயர்வென
உரைத்து வளர்த்தால்
வழுக்காது நாடும்
வளமுடன் வாழும்!

பண்பெனும் நீரூற்றி
பணிவெனும் வேலியிட்டு,
அன்பெனும் உரமிட்டால்
அறம் செழிக்கும்!



தளராத நெஞ்சமும்
தருவோம் அவர்களுக்கு!
விஞ்ஞானக் கனவும்
மெய்ஞான நெறியும்
இரண்டையும் கற்பித்தால்
இமயம் தொடுவர்!

குழந்தைகள் கண்ணீர்
துடைப்பதே கடமை
அவர் புன்னகையிலே
நாடு சிரிக்கும்!

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், அக்குரனை, கண்டி

இன்று புதிதாய்ப் பிறந்ததாய் எண்ணி
அன்றாடம் வாழ்வின் கதவுகளைத் திறக்கிறோம்!
நம்மை அறியாமலே நாமும் திறவுகோலாகிறோம்!
நம்மைத் திறக்க பலபேர் திறவுகோலாய்!
புத்தகத்தின் பக்கங்களைத் திறக்கின்ற போதெல்லாம்
புதுவுலகின் கதவுகள் நமக்காகத் திறக்கும்!
அன்பு காட்டும் உண்மையான மனிதரிடம்
நம்மகத்தின் கதவுகள் திறப்பதை உணரலாம்!
நம்முளத்தில் பலவீனங்களை வெளிக்காற்று பாய்ந்து
செப்பனிட்டுச் செல்கிறது! உண்மை எதுவென்று
உணரச் செய்கிறது! புதிய வினாக்களை
நம்முள் எழுப்பி விட்டுச் செல்கிறது!
விடை தேடலில் தொடர்கிறது நம்பயணம்!
துன்பத்தின் பேழையை இன்பத்தின் சாவி
துடைத் தெடுக்கத் திறக்கிறது! அகத்திரை
அகன்று பலரின் முகத்திரை புரிகிறது!
ஆன்மாவின் பரிமாணங்கள் அனுபவங்களால் ஒளிர
நம்மை நாமே முழுமையாய் உணர்கிறோம்!
அறியாமை இருளகல அறிவொளி புகுகிறது!
அகண்ட அண்டத்தில் நாமும் ஒரு கருவிதான்!
திறக்க முயல்கையில் திறக்கப் படுகின்றோம்!
திறத்தல், திறக்கப் படுதல் இவ்விரண்டும்
சிறப்புடன் வாழ செவ்விய செயல்களாம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

விருப்பான ஒன்றோ வெறுத்துபோகுமளவில்
தொலைந்தே கிடக்குதோ

தேவையளந்து தேவை
கைசேர்ந்தாகவோ
தொலைந்து கிடக்குதோ



அலைந்து மலைத்து போகும்
தருவாயின் பின்னும்
காணக்கூடிப்போகாத
ஒன்றில் நிலைதான் என்ன?

குவிந்து கிடக்கும்
சனநெருக்கடி அங்காடியைப்போல
நின் நயம் கிடந்து
தவிக்கும் பொருட்டு.

பேரருள் மழையென
என் கைசேர்ந்து மனகுளிர செய்தால்
என்ன?

அசந்து மறந்து
போகும் நிலையிலே
நிலைதடுமாறுதே
என் மனமே.

வா வா நிலவே
வான் மேகமாய்
என்னில் ஜோதி சேர்ப்பாயோ.

கசந்து நொந்தொரு
தீ செயலில் விடைக்கொடுத்து
மீண்டல மின்னல் அன்னலாய்
ஓர் இளைபாறிக்கொள்கிறேன்.

பறிக்கும்
முன்
வேகமாக
உதிர்கிறது
தன்
மண்ணை
நேசித்த
மலர்
ஒன்று



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

குவிந்திருந்த
குப்பைகள் பக்கமே
அவளின் பார்வை இருந்தது.

நேரமாகிவிட்டது
பள்ளி வேன்
ஹாரன் அடிக்கிறது.

என்னடி பார்க்கிறாய்?
அம்மாவின் அதட்டல்.

அங்கும் இங்கும்
பார்க்காமல்
ஒழுங்காகப் படிக்க வேண்டும்!

அம்மா... அங்கே பார்!
நேற்று என்னுடன் விளையாடிய
தம்பிப்பாப்பா பொம்மை...

அம்மாவோ
அவசர அவசரமாக
பள்ளிக்கு அனுப்பி வைத்தாள்.
புத்தகத்தைத் திறந்தாள்.

ஆனால்,
அவள் மனம் மட்டும்
இன்னும் குப்பையிலேயே.
நேற்றைய பொம்மை
இன்னும் இருக்குமோ?



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

இல்லத்தின் அரசியே!
குடும்பத்தை ஆளும் ராணியே!
நீ உலகத்தை ஆளும்
ராணியைவிட உயர்ந்தவள்!



பண்பட்டவள், பக்குவப்பட்டவள்.
அழகாய்த் திட்டமிடுகிறாய்! சமைக்கிறாய்!
நிர்வகிக்கும் திறன் உள்ளவள்.
பணத்தையும் திறம்பட
வரவு செலவு செய்கிறாய்.

நீயின்றி ஓர் அணுவும் அசையாது.
பெண் இல்லையேல் குடும்பம் இல்லை.
ஆணுக்கு நம்பிக்கை பெண்.
சக்தி இல்லையேல் சிவன் ஏது?
உலகமும் பெண்களால் இயங்குகிறது!

கவிஞர் லலிதா ஷ்யாம், மதுரை

கொட்டிவிடுங்கள்...

தாங்கமுடியா சோகங்களுக்கும்,
நடந்துவிடக்கூடாது
என்ற எதிர்கால பயத்திற்கும்,
முயற்சித்தும்
கிடைக்காத வெற்றிக்கும்,
எதிர்பார்த்தது நடக்காத
ஏமாற்றமும்,
மனசை நொறுக்கும்
வசைமொழிகளையும்,
சேர்த்து வைத்துக் கொள்ளாதீர்கள்
சொத்துக்களைப் போல!

உடனடியாய் அத்தனையும்
கொட்டிவிடுங்கள்...
உறவிடத்தோ, நட்பிடத்தோ,
இறைவிடமோ,
தனக்குத்தானோயோ,
குறைந்தபட்சம்
தற்காலிகத் தீர்வாய்
மனம் லேசாகும்.

பின்னர்
இருக்கவே இருக்கிறது
காரணமும் தீர்வும்
புத்தியின் காரியமாய்...

****

எப்போதாவதா, எப்பொழுதுமேவா?

பேசி முடிக்கும் முன்பே
பதில் சொல்வதும்,
பேசிக்கொண்டிருக்கையில்
முகபாவனைகளில்
விருப்பமின்மை காட்டுவதும்,
பேசுகையில் கவனிக்காமல்
வேறு பக்கம் முகம் திருப்புவதும்,
தேவைப்பட்ட விஷயங்கள்
நடைபெறாமைக்கு
அமில வார்த்தைகள் சொல்வதும்,
எதிர்பார்த்த செயல்கள்
நடத்தித் கொடுத்தமைக்கு
பாராட்டாமைக்கும்,
செய்த உதவிக்கு
நன்றி தெரிவிக்காமைக்கும்...
எப்பொழுதுதாவது என்றால்
அந்தக் கணத்துச் சூழல், மனநிலை!

எப்பொழுதுமே என்றால்
குணம்!



கவிச்சிகரம் ஐயா இரஜகை நிலவன் எழுதிய கட்டுரைகளின் நந்தவனத் தொகுப்பில் முதல் மலராக மலர்ந்து மணம் வீசுவது, ஆசான் தேவநேயப் பாவாணர் எழுதிய மொழி நூற்கட்டுரைகள் பற்றிய கட்டுரையாகும்.



ஏறத்தாழ கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தே தமிழ்ச் சங்கங்களை அமைத்து இலக்கியங்களைப் படைத்தவர்கள் மூத்தகுடித் தமிழர்கள். கடற்கோள்களால் பல இலக்கியங்கள் அழிந்தபோதும் மனம் தளராமல் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர்கள் நம் முன்னோர்கள். தமிழின் தொன்மையையும், அதன் வேர்கள் உலகெங்கும் பரவியிருப்பதையும் எடுத்துரைக்கிறார் ஆசிரியர். மொழியின் ஒலிப்பு, குறிப்பு, பொருள், செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அதன் வேர்களை ஆராய்ந்து வாழ்நாளையே அர்ப்பணித்தவர் தேவநேயப் பாவாணர் என்பதையும் சிறப்பாகப் பதிவு செய்கிறார்.

இரண்டாவது கட்டுரையாகத் திருவள்ளுவரின் வான் சிறப்பு அதிகாரத்தை எடுத்துரைக்கிறார். இறைவாழ்த்துக்குப் பிறகு வள்ளுவர் இவ்வதிகாரத்தை அமைத்திருப்பது மழையின் இன்றியமையாத தன்மையை உணர்த்துகிறது. நீரின்றி உலகில் உயிர்கள் வாழ முடியாது. மழையே உலகின் வளத்திற்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகிறது. மேகங்கள் மழையாகப் பொழிந்து உலகைக் காக்கும் இயற்கையின் அருட்கொடையை ஆசிரியர் அழகாக விளக்குகிறார்.

மூன்றாவது கட்டுரையான உன் காலடியில் என் கனவுகள் என்பதில் வெற்றியின் ரகசியத்தை எடுத்துரைக்கிறார். வெற்றிக்கான திட்டமிடலும் விடாமுயற்சியும் நம் கைகளில்தான் உள்ளன. வெறும் கற்பனைக் கனவுகளில் மிதப்பதைவிட, உண்மையான இலக்குகளைத் தேர்ந்தெடுத்து உழைக்க வேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்தாகும்.

நான்காவது கட்டுரையான சித்தர் இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கைத் தத்துவம், இயற்கை மருத்துவம், மொழிப்பற்று, அறிவு மற்றும் மனிதநேயத்தை எடுத்துரைக்கிறது. சித்தர்கள் சாதிய எதிர்ப்பு, சமயச் சடங்கு எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு போன்ற மாற்றுச் சிந்தனைகளை முன்வைத்தவர்கள். மாற்றுக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும், சமத்துவமும், மனிதநேயமும் கொண்ட சமூகமாகத் தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

ஐந்தாவது கட்டுரையான தீவிரவாதம் என்பதில் ஆசிரியர் ஒரு வித்தியாசமான கருத்தை முன்வைக்கிறார். நோய்களை ஒழிப்பதிலும், அமைதியையும் சமாதானத்தையும் உலகெங்கும் பரப்புவதிலும் தீவிரம் தேவை என்கிறார். அதேவேளையில் வன்முறை, அநீதி, ஏற்றத்தாழ்வு, மடமை ஆகியவையே உலகில் தீவிரவாதம் உருவாகக் காரணமாகின்றன என்பதைப் பற்றியும் ஆழமாக ஆராய்ந்திருக்கலாம் என்பது எனது கருத்து. இருப்பினும் துணிச்சலான இக்கருத்து பாராட்டுக்குரியது.

ஆறாவது கட்டுரையாகக் கர்மவீரர் காமராசரைப் பற்றிய சிறப்பான பதிவை ஆசிரியர் வழங்கியுள்ளார். கல்வி வளர்ச்சி, அணைகள் அமைத்தல், விவசாய முன்னேற்றம், சமூகநீதி ஆகியவற்றில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. தமிழகத்தின் வளர்ச்சிக்காகத் தன்னலமின்றிப் பாடுபட்ட பெருந்தலைவரைப் பற்றிய ஆசிரியரின் பாராட்டும் பெருமிதமும் சிறப்பானவை.

அடுத்த கட்டுரையில் அழகு என்பது எது என்பதை ஆராய்கிறார். புற அழகைப் பேணுவதில் அக்கறை காட்டும் மனிதர்கள், மன அமைதி, சாந்தம், ஒழுக்கம், சமாதானம் போன்ற உள்ளழகையும் பேண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

வாழும்வரை போராடு என்ற கட்டுரையில் வாழ்க்கை என்பது தொடர் போராட்டம் என்பதை எடுத்துரைக்கிறார். மனிதர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்கள் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப மாறுபட்டாலும், இலக்கை அடைய அறிவையும் உழைப்பையும் பயன்படுத்திப் போராட வேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்தாகும். சமத்துவம், மனிதநேயம், சமவாய்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற கட்டுரையில் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உயர்ந்த குறிக்கோள் அவசியம் என்கிறார். இலக்கை மனதில் பதித்து, அதை அடைவதற்குத் திட்டமிட்டு, படிப்படியாக உழைத்தால் வெற்றி பெறலாம் என்பது அவரது அறிவுரையாகும். எனினும் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், சமவாய்ப்பின்மை, பொருளாதாரத் தடைகள் போன்றவற்றையும் கருத்தில் கொண்டிருந்தால் கட்டுரை மேலும் வலுப்பெற்றிருக்கும் என்பது எனது எண்ணம்.

இறுதிப் பூவாக மலர்ந்திருப்பது இயேசுபிரான் பற்றிய கட்டுரையாகும். சமாதானத்தையும் அன்பையும் போதித்த இயேசுபிரான் வன்முறையால் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்ட வரலாற்றை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். உலகில் வன்முறையும் அதிகார ஆதிக்கமும் தொடர்ந்து நிலவினாலும், மனிதநேயம், நேர்மை, சமாதானம் ஆகியவற்றை முன்னிறுத்தும் அவரது சிந்தனைகள் போற்றத்தக்கவை.

மொத்தத்தில், ஆசிரியர் இரஜகை நிலவனின் இக்கட்டுரைகள் மொழியின் தொன்மை, தமிழர்களின் வரலாறு, இயற்கையின் சிறப்பு, சித்தர்களின் சிந்தனை, சமூகநீதி, மனிதநேயம், தலைவர்களின் தொண்டு, வாழ்வியல் நெறிகள் எனப் பல்வேறு தளங்களில் சிந்திக்கத் தூண்டுகின்றன. சில இடங்களில் கருத்து விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் இருந்தாலும், நேர்மையான பார்வையும் ஆக்கபூர்வமான சிந்தனையும் இத்தொகுப்பின் சிறப்புகளாகும்.

பாவரசு முகவை திருநாதன், மும்பை

தோற்றமும் இளமைப் பருவமும்



ந. பிச்சமூர்த்தி 1900-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட இயற்பெயர் வேங்கட மகாலிங்கம். இவருக்கு முன் பிறந்த குழந்தைகள் இறந்துபோனதால், அப்போதைய சமூக நம்பிக்கையின்படி இவரை 'பிச்சை' என்று அழைக்கும் வழக்கத்திலிருந்து 'பிச்சமூர்த்தி' என்ற பெயர் நிலைத்தது.கும்பகோணத்தில் கல்வி பயின்ற இவர், சட்டம் பயின்று 1924 முதல் 1938 வரை வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் இந்து சமய அறநிலையத்துறையில் அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இலக்கியப் பணி மற்றும் புதுக்கவிதை விடியல்

1. புதுக்கவிதையின் தந்தை

பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து, கவிதையின் கட்டுக்கோப்பை மேலும் தளர்த்தி, பாமரனும் உணர்ந்து கொள்ளக்கூடிய பாணியில் புதுக்கவிதையை ஒரு இயக்கமாகவே வளர்த்தெடுத்தவர் ந. பிச்சமூர்த்தி. இவரது 'காட்டுவாத்து', 'வழித்துணை' போன்ற கவிதைத் தொகுப்புகள் தமிழ் புதுக்கவிதை வரலாற்றின் முக்கிய மைல்கற்களாகும்.

"கவிதை என்பது வெறும் எதுகை மோனை அமைப்பல்ல; அது மனத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் தூய உணர்வின் வெளிப்பாடு" என்பதைத் தம் எழுத்துகள் மூலம் நிரூபித்தவர்.

2. சிறுகதை உலகின் முன்னோடி



'மணிக்கொடி' இதழ் காலத்தில் எழுதத் தொடங்கிய பிச்சமூர்த்தி, சிறுகதைத் துறையிலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்தார். மனித மனத்தின் சிக்கல்கள், தத்துவப் தேடல்கள், ஆன்மீக சிந்தனைகள் மற்றும் அன்றாட வாழ்வின் யதார்த்தங்களை மிக நுட்பமாகத் தம் கதைகளில் படம்பிடித்துக் காட்டினார். 'பதின்எட்டாம் பெருக்கு', 'கிளிக்கூண்டு', 'மோகினி' ஆகியவை இவரது புகழ்பெற்ற படைப்புகளில் சிலவாகும்.

3. புனைப்பெயர்கள்

இவர் 'பிட்சு', 'ரேவதி' ஆகிய புனைப்பெயர்களிலும் ஏராளமான படைப்புகளை எழுதியுள்ளார். குறிப்பாக, தம் கவிதைகளில் ஆன்மீகச் சாயலும் வாழ்வியல் தத்துவமும் மிளிர எழுதியவை இவருக்குப் பெருமை சேர்த்தன.

எழுத்து நடை மற்றும் தத்துவச் செறிவு

பிச்சமூர்த்தியின் கவிதைகளிலும் கதைகளிலும் வேதாந்தச் சிந்தனைகளும் உபநிடத தத்துவங்களும் இயல்பாகக் கலந்திருக்கும். இயற்கை எழில், பறவைகளின் கூவல், மனித உணர்வுகளின் சூட்சுமம் ஆகியவை இவரது பேனா வழியே கவிதையாக உருவெடுத்தன. மரபுக்கவிதையின் எதுகை, மோனைத் தளைகளை விடுத்து, சந்த நயமும் சொல்லாட்சியும் கொண்ட எளிய நடை இவருடைய சிறப்பு.



முடிவுரை

தமிழ் இலக்கிய உலகில் மரபுக்கும் புதுமைக்கும் இடையிலான பாலமாகத் திகழ்ந்தவர் ந. பிச்சமூர்த்தி. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் 4-ஆம் தேதி இவர் மறைந்தாலும், இவர் விதைத்துச் சென்ற புதுக்கவிதை எனும் வித்து, இன்று ஆலமரமாக வளர்ந்து தமிழ் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தி வருகிறது. நவீன தமிழ் கவிதையைப் பயிலும் எவரும் தவிர்க்க முடியாத மாபெரும் சக்தியாக ந. பிச்சமூர்த்தி என்றும் நிலைத்திருப்பார்.

ந. பிச்சமூர்த்தியின் வாழ்க்கைச் சுருக்கம்

காலம் / அம்சம்	விவரங்கள்
பிறப்பு	8 நவம்பர் 1900 (கும்பகோணம்)
இயற்பெயர்	வேங்கட மகாலிங்கம்
புனைப்பெயர்கள்	பிட்சு, ரேவதி
தொழில்	வழக்கறிஞர், அறநிலையத்துறை அலுவலர், எழுத்தாளர்
இலக்கியப் பங்களிப்பு	புதுக்கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை
முக்கியப் படைப்புகள்	காட்டுவாத்து, வழித்துணை, பதின்எட்டாம் பெருக்கு, கிளிக்கூண்டு
மறைவு	4 டிசம்பர் 1976



நாளை நமதே

மழைத்துளி மண்ணில் விழுந்தால்தான்

உயிர் மலரும்!

முயற்சித்துளி உழைப்பில் விழுந்தால்தான்

வெற்றி மலரும்!

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com